# இயக்கம்

Iyakkam


உள்ளே . . .

- ஒரு தோட்டம் மயானமாகியது.
- மலையாண்டிப் பூசாரி.
- மாணவர் உலகிலே.
- 1977 தேர்தல்-ஒரு கண்ணோட்டம்.
- நடேச ஐயர்.

மற்றும் பல அம்சங்கள் . . .



மலர் 1 ○ விலை சதம் 60 ○ டிசம்பர், 1977 ○ இதழ் 2


# அன்று உரிமைக்குப் போராட்டம்

# இன்று உயிருக்கே ஊசலாட்டம்

1977, ஆகஸ்ட் மாதம், இந்நாட்டில் தமிழர்களுக்கு ஒரு இருண்ட மாதம். சகல தமிழ் மக்களுக்கெதிராகவும் நடத்தி முடிக்கப்பட்ட அநாகரீக வெறியாட்டத்தின் உச்சக் கட்டம். தமிழர்கள் என்ற ஒரே காரணத்தினால் முதியவர்களும், இளைஞர்களும், பச்சிளம் பாலகர்களும், தங்கைகளும், தாய்மார்களும் பட்ட பாட்டை ஊரறியும்; இந்த உலகறியும்.

## மலையகமே நீ பட்ட பாட்டை யாரறிவார் ?

நடந்து முடிந்த ஆயிரமாயிரம் அட்டூழியங்களை மூடி மறைத்தாலும், மக்களின் உள்ளக் குமுறல்களை மறைக்க முடியாது.

வரலாற்றின் கறை படிந்த இந்த அத்தியாயங்கள் வெறும் தற்செயல் நிகழ்ச்சிகளா? நடந்துபோன சம்பவங்கள் மட்டும் தானா? இல்லை! இந்த சம்பவங்கள், இவற்றின் பின்னணியில் மறைந்துள்ள பலஉண்மைகளை நாம் அசட்டை செய்ய முடியாது.

ஏனெனில்...

இவை ஒவ்வொரு மனிதனதும், குடும்பத்தினதும், ஏன் முழு சமூகத்தினதுமே உயிர் வாழ்க்கை சம்பந்தப்பட்டப் பிரச்சினை. மலையகத்தின், இந்நாட்டின் எதிர்கால சுபீட்சத்தில் அக்கறை உள்ள ஒவ்வொருவனும் இப்பிரச்சினை குறித்த பிரஞ்ஞையுள்ளவனாக இருப்பது அவசியம்.

## மகாவலி செந்நிறமாகியது!

யாழ்ப்பாணத்தில் போலிசாருக்கும், பொதுமக்களுக்கும் ஏற்பட்ட மோதல் பல நூறு மைல்களுக்கு இப்பால் உள்ள மகாவலியை செந்நிறமாக-அதுவும் தோட்டத் தொழிலாளரின் ரத்தத்தால்-பாயச் செய்தது. ஆய்வுகள், தரவுகள்படி முதலில் மோசமாகப் பாதிக்கப்பட்டது கண்டிப் பிரதேசமாகும். பல தமிழர்களின் கடைகள் தீக்கிரையாயின. பஸ்களில் ரயில்களில் இருந்த தமிழர்கள் அடித்து நொறுக்கப்பட்டனர். கண்டியை அடுத்துள்ள தோட்டங்களில் தொழிலாளரின் உடமைகள் முற்றுக்கச் சூறையாடப்பட்டு, பெண்கள் பலாத்காரத்திற்கு ஆளாக்கப்பட்டனர். மாத்தளைப் பிரதேசத்தில் பல தோட்டத் தொழிலாளர்கள் உடுத்தத் துணிகள்கூட இன்றி அடித்துத் துரத்தப்பட்டனர். மாத்தளைப் பகுதியில்மாத்திரம், என்பதுக்கும் மேற்பட்ட பெண்கள் முக்கியமாக தோட்டப் புறங்களைச் சேர்ந்தவர்கள் சிங்களக்காடை


( 2-ம் பக்கம் பார்க்க )


# வரவு — செலவு திட்டமா ?

# வாட்டி எடுக்கும் சட்டமா ?

தேர்தல் முடிந்ததும், நாட்டின் சகல மக்களும் குறிப்பாக மன வேதனைக்கும், உடல் வாதனைக்கும் ஆட்பட்டிருந்த மலையக மக்கள், அரசாங்கத் தரப்பினர் ஆரவாரப்படுத்திய வரவு செலவுத் திட்டத்தில் பெரிய நம்பிக்கையே வைத்திருந்தனர்.

## ஆனல், நடந்தது என்ன?

இந்த அரசாங்கம் மாத்திரமல்ல, சகல அரசாங்கங்களுமே தங்கள் வாக்குறுதிகளை நிறைவேற்ற மலையகப் பாட்டாளி உழைத்துத் தரும் அந்நிய செலாவணியில்தான் தங்கியிருந்திருக்கின்றனர். தேசிய வருமானத்தில் 3000 கோடி ரூபாய்க்கு மேல்தேயிலை றப்பர் பொருட்களில் இருந்து கிடைக்கவிருக்கின்றன. இதைக் கொண்டுதான் வேலையில்லாதவர்களுக்கு 50 ரூபா படி அளக்க அரசாங்கத்தால் ஆகியிருக்கிறது. இது மாத்திரமல்ல ஏனைய சலுகைகள், வேலைத்திட்டங்கள் எல்லாம் பெரும்பாலும் இவ்வருமானத்தை மனதில் வைத்தே உத்தரவாதப் படுத்தப்பட்டிருக்கின்றன.


(2ம் பக்கம் பார்க்க)


## பாரதத்தை பயங்கரப் புயல் தாக்கியது!

தமிழ் நாடு மோசமான வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட சில நாட்களுக்குள்ளேயே பயங்கரச் சூறுவளி கிழக்குக் கரையையும், ஆந்திரப் பிரதேசத்தையும் தாக்கி நூற்றுக் கணக்கான உயிர்களைப் பலிகொண்டுள்ளது. இத்தோடு பிறிதொரு கோரப்புயல் மேற்கு கரையைத் தாக்கியதால் நூற்றுக்கு மேற்பட்ட கிராமங்கள் அழிந்துள்ளன. ஆயிரக் கணக்கானவர்கள் இறந்துள்ளார்கள்.

இயற்கையின் கோரதாண்டவத்திற்கு உள்ளாகி இருக்கும் பாரத மக்களுக்கு எமது அனுதாபங்கள்.




**மலையக மக்கள் இயக்கத்தின் எழுச்சிக் குரல்!**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்று...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யர்களால் மிருகத்தனமாகக் கற்பழிக்கப்பட்டுள்ளதாக சொல்லப்படுகிறது. பலரால் கற்பழிக்கப்பட்டுள்ள 12 வயதே நிரம்பிய தங்கை ஒருவர் உயிரிழந்துள்ளாராம். வத்தேகமையிலும், கேகாலையிலும், யட்டியாந்தொட்டை, அவிசாவளை, மத்துகமை, ரக்வான, மடனியாயப்பிரதேசங்களிலும் இதே சோகக்காரியங்கள். கேகாலையைச் சேர்ந்த கரந்துப்பொனத்தோட்டத்தில் மாத்திரம் பதினெட்டுக்கும் மேற்பட்ட பெண்கள் மிக மோசமாக, பலரால் பலமுறை கற்பழிக்கப்பட்டுள்ளார்கள் என அறிகிறோம். அப்பகுதியைப் போன்ற தோட்டங்களில் சகல உடைமைகளையும் இழந்து, அடித்து நொறுக்கப்பட்ட நிலையில் மக்கள், காடுகளில் பட்டினியாக வாழ்ந்திருக்கின்றார்கள். இது போதாதென்று அவர்களை வீடுகளும் தகர்க்கப்பட்டுள்ளன. இந்த அநியாயங்களை மக்கள் போலிசுக்கு முறையிடப் பயந்ததாலும், போலிசாரின் அசிரத்தையாலும், மானப் பிரச்சனையாலும் (பெண்களைப் பொறுத்தவரை) ஒன்று பதிவேடுகளில் இல்லை தான். ஆனால் இவற்றுக்கு முகம் கொடுத்த மக்கள் இன்னும் இருக்கின்றார்கள். சாட்சியங்களாக நின்று துடித்தவர்கள் இன்னும் இருக்கின்றார்கள். இந்த அட்டூழியங்களைச் செய்த அக்கிரமக்காரர்களும் இன்னும் இருக்கிறார்கள். கூடவே சட்டமும் இருக்கிறது.

அகதிகள் முகாம்களுக்குச் சென்றவர்களும் அங்கு பாரபட்சமாக நடத்தப்பட்டதாக அறிகின்றோம். அகதிகள் இல்லை என்ற அபிப்பிராயத்தை உருவாக்கும் நோக்கத்திற்காகவோ என்னவோ, தகுந்த பாதுகாப்பில்லாதப் பகுதிகளுக்கும் தொழிலாளர்கள் விருப்பத்திற்கு மாறாக அனுப்பி வைக்கப் பட்டிருக்கின்றனர்.

இந்தக் கலவரம், காட்டுகின்ற முக்கிய அம்சங்களை ஆராய நாம் கடமைப் பட்டுள்ளோம்.

* இது சிங்கள மக்களின் மிகச் சிறுபான்மையினரின், முக்கியமாக சிலக் காடையர்களின் கைவரிசை என சிலரால் அசட்டையாகக் கூறப்படுகிறது. உண்மை அதுதானா?

அதிகமான தோட்டங்கள் தாக்கப்பட்டபோது ஏறக்குறைய முழுச் சிங்களக் கிராமமும் இதில் ஈடுபட்டுள்ளதாக அறிகின்றோம். ஆண்கள் தாக்குதலிலும், கற்பழிப்பிலும் ஈடுபட, பெண்களும், பிள்ளைகளும் கொள்ளையடிப்பதில் ஈடுபட்டதற்கு ஆதாரங்கள் உண்டு.

சகல அரசியல் பின்னணி உள்ளவர்களும் ஈடுபட்டிருந்திருக்கின்றார்கள். யு. என். பி. [illegible] சுதந்திரக்கட்சி, ல. [illegible] சி, கம்யூனிஸ்ட்கட்சி, [illegible] பி. மற்றும் பல அரசி[illegible] பின்னணியைச் சார்ந்தவர்கள் தாக்குதலில் ஈடுபட்டதாக பாதிக்கப்பட்டவர்களின் சாட்சியங்களிலிருந்து அறிகின்றோம்.

இதைவிட மோசமாகக் கவால் படையினரின் நடவடிக்கை இருந்திருக்கிறது. நுவரெலிய-மஸ்கெலிய எம். பி. திரு. தொண்டமான் தாக்குதலின்போது போலிசார் வாளாவிருந்தனர் எனப் பாராளுமன்றத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்க எம். பிக்களின் பேச்சு, அரசாங்கத்தை ஆபத்பாந்தவனாக எண்ணியிருந்த தமிழ் மக்களை ஏமாற்றியுள்ளது.

அகலவத்தை எம். பி. சிரில் காரியவாசம் 'சிங்கள இளைஞன் உள்ளத்தில் உள்ள துட்டகெமுனு வெளிப்பட்டு வரமுடியும்' என 22-8-77ல் இனவாதத்தைக் கக்கினார். (மகா வம்சத்தின்படி துட்டகெமுனு எல்லாளனோடு நேர் நின்று துவந்த யுத்தம் செய்தானே யொழிய கற்பழிப்பிலும், கொள்ளையடிப்பிலும் ஈடுபடவில்லை என்பதை நினைவுறுத்த விரும்புகிறோம்). அன்று பேசிய பேர்சி சமரவீர எம். பி.யும், ஈ. எல். சேனநாயக்காவும், இனவாத தோரணையில் பேசியுள்ளனர்.

இந்த வெறியாட்டத்தின் காரணத்தை தமிழர் மீது சாட்ட பலர் முற்படுகின்றனர்.

இவ்வினக் கலவரம் ஒரு நீண்டகால உருவாக்கத்தின் வெளியீடெனக் கொள்ளலாம். 1958 இனக் கலவரத்தில் மலையகம் பாதிக்கப்படாவிடினும், அதன் பிறகு இனவாதத்திற்கு உட்பட்டிருப்பதை [illegible] லாம்.

1971ம் ஆண்டில், ஜே. வி. பி. 'இந்தியாவில் தரிப்பு வாதம்' என்ற விரிவுரையை தோட்டத் தொழிலாளர்க்கு எதிராகப் பாவித்தபோது இனவாதம் சிங்களக் கிராமங்களில் காலூன்றியதையே அது குறிக்கிறது. 1971க்குப் பின்னர் வந்த காணிசீர்திருத்த சட்டமும் (இடது சாரிகள் அரசாங்கத்தில் இருந்தப்போதே) இனவாத ரீதியிலேயே அமுல்நடத்தப்பட்டது. பதிவுப்பிரஜைகளுக்கு காணி வழங்க மறுக்கும் மசோதாவுக்கு ஆதரவாக ஸ்ரீ. ல. சுதந்திரக்கட்சியோடு, சேர்ந்து யு. என். பியும் வாக்களித்தது. தேர்தல் தொகுதி நிர்ணயவிடயத்திலும் தமிழர்களும், தோட்டமக்களும் பாரபட்சமாக நடத்தப்பட்டனர்.

உண்மையில் இதன் வரலாறு 1948ல் யு. என். பி. யால் வாக்குரிமை பறிக்கப்பட்ட காலத்திற்குப் பின்னேக்கிப் போகிறது. டெல்டா, சங்குவாரி, நிகழ்ச்சிகள், லட்சுமணன் கொலை, ஹட்டன் மாணவர்கள் தாக்கப்பட்டமை, என்பவை வளர்ந்து வரும் இனவாதத்தைக் கொடிகாட்டின எனலாம்.

**இவற்றையெல்லாம் பார்க்கும்போது நிகழ்ச்சிகள் நடந்து முடிந்து விட்டாலும் இனவாதம் ஒழிந்து விட்டது எனக் கூறமுடியாது. அது நீறு பூத்த நெருப்பாக இருந்து திரும்பவும் ஜுவாலையாக எரிக்கலாம். அதற்கான சாத்தியக் கூறுகள் உண்டு.**

பிரதான அரசியல் கட்சிகளும், சிங்களத் தலைமைகளும் இன்று [illegible] மலையகம், பொருளாதாரப் போட்டியின் மையமாக மாறக் கூடிய நிலைமை இருக்கிறது. சிங்களமக்களிடையே வேலையில்லாத் திண்டாட்டமும், வறுமை நிலைமையும், தோட்டப்புறங்களுக்கு படையெடுக்கும் உந்து சக்தியாகலாம். அப்போது மலையக மக்கள் எதிரிகளாகக் காட்டப்படுவார்கள்.

மலையகத்தில் தோட்டப்புற நிர்வாகங்கள் சிங்கள மயப் படுத்தப்பட்டு வருவதால், தோட்ட நிருவாகத்திற்கெதிரான எழுச்சிகூட இனக்கலவரமாக மாற்றப்படலாம்.

வட கிழக்குப் பகுதிகளில் தமிழர்கள் நடத்தும் போராட்டம், இம்முறையைப்போல நேரடியானத் தாக்கத்தை ஏற்படுத்தும்.

(5ஆம் பக்கம் பார்க்க)

# வரவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கெல்லாம் காரணமாக இருந்த தோட்டப்புற மக்களை குறித்து நிதியமைச்சர் சிறிதளவாவது குறிப்பிடவில்லை. அவரது முழுப் பேச்சையும் பார்க்கும்போது தோட்டப்புற மக்களை முழுதாக உதாசீனம் செய்திருப்பதாகப் படுகிறது.

## பாராட்டுத்தான் வேண்டாம் பானையாவது நிறைந்ததா?

'ஆனை வந்ததும் பானை நிறையும்' என ஓட்டுக் கேட்டவர்கள், வார்த்தைகளை நம்பி ஓட்டுள்ளவர்கள் போட்டார்கள், மற்றவர்கள் ஓட்டிக்கொண்டு கூப்பாடு போட்டாவது ஆதரவைக் காட்டினார்கள். இன்று 300 - ரூபாய்க்கு மேல் குடும்ப வருமானமுள்ளவர்களுக்கு இலவச அரிசி முதலியவை கிடையாது என அரசாங்கம் கூறியிருக்கிறது. விளைவு... பல தோட்டத் தொழிலாளர்களின் குடும்பங்கள் கூப்பன்களை இழக்கப் போகின்றன. கிராமப்புறங்களில் 300 க்கு மேல் வருமானம் பெற்றாலும் சரியாக அளவிடு ஒன்றுமில்லாததால் பலர் பாதிக்கப்படாமல் விடப்படலாம். தோட்டத்தில் அது நடக்காது. தொழிலாளியின் நாட்களுக்கு வரவு இல்லாவிட்டாலும், ஒரு சத வருமானத்திற்கும் கணக்கு உண்டு. கணவன், மனைவியின் வருமானத்தின் மொத்த தொகை 300 ஐ எட்டியதும் அவர்களுக்கும் பிள்ளைகளுக்கும் கூப்பன் பறிபோகப் போகிறது. இதை நினைக்கும் போது 1973ம் ஆண்டு பட்டினிப் பஞ்சம் நிலைவுக்கு வருகின்றது.

விலைவாசி கூடுகிறதாக தெரிகிறதே ஒழிய, குறைகிறதாகப் படவில்லை. தோட்டத் தொழிலாளியை குதிக்க குதற கட்சி பேதமின்றி சகல முதலாளிகளும் காத்திருப்பார்கள்.

## எல்லாம் மாயை தானா?

நுவரெலிய மஸ்கெலிய தோட்டங்களில் மாதச்சம்பளம் தருவதாக வாக்குறுதிகள் எங்கே? 8 றாத்தல் தானியம் தருவோம் என்ற வாக்குறுதியைப் போல இதுவும் காற்றில் பறந்து விட்டதா? புதிய வரவு செலவு திட்டம் மாதச்சம்பளத்தை தரும் என கூப்பன் இல்லாத நிலையில் உணவுப் பங்கீடு தோட்ட நிருவாகத்தின் கையில் சிக்குமேயானால், நிருவாகத்தின் எதேச்சாதிகாரமும், ஊழலும் திரும்பவும் 70ம் ஆண்டைப் போல உச்சக் கட்டத்தை அடையும்.

நாணய மதிப்புக் குறைப்பினால், பாதிக்கப்படாதிருக்கும்படி அரசாங்கம் தாயகம் திரும்புவோர்க்கு 65% சலுகை வழங்கியப் போதும், முன்பு பெற்றதைவிட இது 11% குறைவானதாகவே இருக்கும்.

தோட்டத் தொழிலாளியின் வருங்கால சந்ததியினர்க்கு தோட்டப் புறத்தில் பாதுகாப்பு கேள்விக்குறியாகியிருக்கிறது. ஏனெனில் இந்நாட்டின் வேலையில்லாப்பட்டாளத்தை மலையகத்தில் அடைக்கப் பட முயற்சிகள் நடப்பதாகத் தெரிகிறது.

தோட்டத் தொழிலாளியின் உழைப்பில் இருந்துதான் நாட்டின் பெரும் பகுதி வருமானம் கிடைக்கிறது, என்ற உண்மை கேவலமான முறையில் இந்நாட்டு மக்களுக்கு மறைக்கப் பட்டு வருகிறது. வலதுசாரிகளும், போலி இடதுசாரிகளும் இதையே போட்டி போட்டுச் செய்து வந்திருக்கின்றார்கள்.

இதனால்தான் ...

அம்மாவின் ஆட்சியிலும் அய்யாவின் ஆட்சியிலும் அடி தோட்டத் தொழிலாளிகளே பலமாக விழுகிறது. ஏனெனில்... சமூக வளர்ச்சிக்கு காரணமான அவன் இன்னும் சமுதாயத்தின் அடித்தளத்திலேயே இருக்கின்றான்- இருக்க நிர்ப்பந்திக்கப்படுகிறான்.

# மனம் திறந்து

ஏறக்குறைய ஒன்றரை நூற்றாண்டுகளை மட்டுமே கொண்ட மலையக மக்களின் இலங்கை வரலாற்றில் அனுபவித்து வந்த இன்பங்களையும், சந்தோஷங்களையும் விட, துன்பங்களும், சோதனைகளும், வேதனைகளும்தான் அதிகம்.

இயற்கை பயங்கரமாக வஞ்சித்து இருக்கின்றது. சமூக மட்டங்களில் - எத்தனையோ போராட்டங்கள்; ஆனால், இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல ஆகஸ்ட் கலவரம் அத்திவாரத்தையே அசைத்து வைத்துவிட்டது.

இத்தகைய சந்தர்ப்பத்தில் இவர்களது அபிலாஷைகளை அப்படியே புரிந்து கொண்டு அதற்காக சேவை செய்யக்கூடிய ஒரு நேர்மையான தலைமை அத்தியாவசியமானதாகின்றது. இங்கு தோன்றியிருக்கக் கூடிய சங்கங்களையோ கட்சிகளையோ நோக்கும்போது, இவற்றின் தீர்க்கதரிசனமாக இவற்றின் ஒற்றுமையின்மையின் விளைவுகளுக்கு இன்றைய மக்களது நிலையும், பிரச்சினைகளுமே போதிய சாட்சியங்களாக நிற்பது புரிகிறது.

இந்நிலை இனியும் தொடரத்தான் வேண்டுமா? சிண்டு பிடி யுத்தத்தை நிறுத்திக்கொண்டு ஐக்கியத்திற்கு முன் வருதலே இப்போதைய தேவை.

மலையகத்தின் இளைய தலைமுறைகள் தமது முந்திய தலைமைகளின் தவறுகளை வாரிசாக்கிக்கொள்ளக் கூடாது.

இன்றைய இளம் தலைமுறையினர் பொதுவேலைத்திட்டத்திற்குக் கீழ் ஒன்றுபட்டு மலையக மக்களின் விமோசனத்திற்கு தீர்க்கதரிசனமான, உருப்படியான பங்களிப்பை ஆற்ற முன்வர வேண்டுமென **மலையக மக்கள் இயக்கம்** விரும்புகிறது. அதற்கு தளம் அமைத்துக் கொடுக்கக் காத்திருக்கின்றது.

புதிய தலைமுறையினர், மூத்த தலைமுறையினரின் தவறுகளை விமர்சிக்கும் அதே நேரத்தில் இவர்கள் மத்தியில் உள்ள நல்ல அம்சங்களைக் கிரகித்து ஒன்று படுவதும் அவசியம்.

(ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற இதழ் தொடர்ச்சி 1

## மலையக மக்கள் மத்தியில் உள்ள ஸ்தாபனங்கள்

### ..ஒரு நோக்கு

# நடேச ஐயர்

## மலையகத்தின் தொழிற்சங்க முன்னோடி

'தொழிற்சங்கத்தை மலையகத்தில் ஆரம்பித்ததற்காக நாம் யாரிடமும் மன்னிப்புக்கேட்கத் தேவையில்லை... அது எமது உரிமை''-நடேச ஐயர் 1931.

நடேச ஐயரைப் போன்றவர்களின் முக்கியத்துவம் பின்னால் வந்த பல போலி தலைவர்களாலும் அவர்களின் துதிபாடிகளாலும் மூடிமறைக்கப்பட்டுள்ளது. இன்னும் இதைப்போன்று மலையகத்திற்கு உண்மையாக உழைத்த பலரை 'இயக்கம்' உங்களுக்கு அறிமுகம் செய்யும் பணியை தொர்டர்ந்து செய்யும். உதவியாக தகவல்களை அனுப்பி உதவினல் நன்று.

-ஆசிரியர்

தோட்டங்கள் திறக்கப்பட்டதை தொடர்ந்து தான் இலங்கையின் பொருளாதார அமைப்பில் முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டன. முதலாளித்துவ ரீதியிலான உற்பத்திமுறை இதனேடுதான் அறிமுகமாகிறது. இதன் விளைவுகளாக இரு பெரும் சமூக சக்திகள் எழுந்தன. ஒன்று மலையகத்தில் தோட்டங்களில் குடியமர்ந்த தோட்ட தொழிலாளர்கள் என்ற சக்தி, மற்றது தோட்டப்புற உற்பத்திகளை சார்ந்து எழுந்த நகர்ப்புற தொர்ழிலாளர்கள் என்ற சக்தி இவ்விரு சக்திகளுமே பின்னர் இலங்கையின் சமூக அரசியல் போக்கின் பிரதான அம்சங்களாகின.

ஆனலும் நகர்ப்புற தொழிலாளர்கள் இலங்கை மக்களில் முக்கியமாக விவசாயிகளின் மத்தியில் இருந்து வந்தமையாலும், தேசிய ரீதியான நடவடிக்கைகளோடு அவர்களுக்கு இருந்த தொடர்பாலும் முதல் தொழில் சங்க முயற்சிகள் இவர்கள் மத்தியில் தான் ஏற்பட்டன தோட்ட தொழிலாளர் மத்தியில்1931ஐ அடுத்து-ஏறக்குறைய 100 வருடங்களுக்குப் பிறகு-தான் தொழில்சங்க முயற்சிகள் ஆரம்பித்தன. இதற்கு முக்கியகாரணம் பிரித்தானயர் தோட்டமக்களை ஏனைய மக்களிலிருந்து தனிமைப் படுத்தி வைத்திருந்தமையாகும். இதைவிட பிறிதொரு முக்கிய காரணம் பெரிய கங்காணிமார்களின் அடக்குமுறையாகும்.

### கம்பளியும் கருப்புக் கம்பளியும்!

தோர்ட்டத் தொழிலாளரை இலங்கைக்கு கொண்டுவரும் பிரதான தரகர்களாக கங்காணிமாரே இருந்தனர். இவர்களுக்கு தோட்டத் துரையால் தலைவரியும், பென்ஸ் காசும் கொடுக்கப்பட்டது. அத்தோடு 1927ல் சட்டம் கொண்டுவரப்படும் வரையும்; அதன் பிறகும் கூட தொழிலர்ளியின் முழுச் சம்பளமும் கங்காணியிடமே கொடுக்கப்பட்டது. கங்காணிமாரே கடை நடத்தி ஸிம்ரபக்கும், கருப்புக்கம்பளிக்கும், வேட்டிக்கும், வெள்ளை வேட்டிக்கும் என்று கள்ளக்கணக்கு எழுதி கொள்ளைலாபம் அடித்ததை யாவரும் அறிந்ததே. இவர்கள் தோட்டங்களில் பல கள்ளப் பெண்சாதிகள் கொண்ட அந்தப்புரங்களோடு தங்கள் தர்பாரை நடத்திவந்தனர். தோட்டத்துக்குள் அன்னியர் யாரையும் விடாமல் அட்டகாசம் செய்ததால் தொழிற்சங்கவாதிகள் தோட்டங்களுக்கு தங்கள் உயிரைப் பணயம் வைத்தே போகவேண்டியிருந்தது. கொடுமைகளுக்குப் பெயர்போன பெரிய கங்காணிகள் பலர் இருக்கின்றனர்.

### கொட்டியாகலை ஒய்யப்பன் கங்காணி வாயிலே மண்ணு!

இப்படிப்பட்ட கங்காணிகளில் ஒருவரான கொட்டியாகலை ஒய்யப்பன் கங்காணியால் கட்டிவைத்து அடிக்கப்பட்ட குடுகுடுப்பை வித்தைக்காரர் ஒருவர் தனது வித்தைகளை ஆரம்பிக்குமுன் இப்படி சொல்லுவது வழக்கமாம் ''எல்லார் வாயிலேயும் சோறு, கொட்டியாகலை ஒய்யப்பன் கங்காணி வாயில மண்ணு!'' தொழிலாளரைக் கட்டிவைத்து அடிக்க பயன்பட்ட கம்பங்களை இன்றும் ஹப்புஹஸ்தன போன்ற தோட்டங்களில் காணக்கூடியதாக இருக்கிறது.

இத்தகைய தடைகளை மீறி தொழில் சங்க முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. 1923ல் ஆரம்பிக்கப்பட்ட களனிப்பிரதேச அமைப்பு தோல்வியில் முடிந்தது. உண்மையில் 1931 சர்வசன வாக்குரிமையை அடுத்துதான் தோட்டங்கள் என்ற கோட்டைகளின் கதவுகள் சிறிதே திறந்தன. முதன் முதலாக தோட்டப்பகுதிகளில் துண்டுப் பிரசுரங்களும், பிரசாரங்களும்எட்டிப்பார்த்தன. 1930தேர்தலில் பெரிசுந்தரம், வைத்தியலிங்கம் ஆகிய இரு தமிழர்களும் பண்டாரவளையில் இருந்து (F) பெலோஸ் கார்டன் என்ற வெள்ளைக்காரரும் மலையகமக்கள்சார்பாக தெரிவு செய்யப்பட்டனர். திரு. பெரிசுந்தரம் தொழில் மந்திரியாக நியமிக்கப்பட்டாலும் 1931 இந்திய ஏஜண்டின் ரிபோர்ட் கூறுவதைப் போல அது தனி மனிதரின் திருப்திக்கான நியமனமே ஒழிய தோட்ட தொழிலாளரின் திருப்திக்கானதல்ல.

### நடேச ஐயரின் பிரவேசம்

உண்மையான தொழிற்சங்க முயற்சிகள் நடேச ஐயரின் பிரவேசத்தோடு தான் ஆரம்பிக்கின்றன. இவர் இந்தியாவிலிருந்து பத்திரிகை தொழில் சம்பந்தமாக வந்து பின்னர் தொழிற் சங்க முயற்சிகளில் ஈடுபட்டார். கம்யூனிஸ்ட் எனக் கருதப்பட்ட மணிலாலோடு இவருக்கு இருந்த தொடர்பின் காரணமாக இவரது நடவடிக்கைகள் குறித்து பிரித்தானிய போலிஸ் பகுதியினர் ஒரு தனி தஸ்தாவேஜை இவரைக் குறித்து தயாரித்திருந்தனர். அப்போது இலங்கையில் பெரிய தொழிற்சங்கவாதியாக இருந்த A. E. குணசிங்காவுடன் நடேச ஐயர் கொண்ட தொடர்பு மலையகத் தொழிற்சங்க ஸ்தாபிதத்திற்கு பெரிதும் சாதகமாக இருந்தது. அத்துடன் இது மலையகபாட்டாளிகள், நகர்ப்புற பாட்டாளிகளோடு சேர்வதற்கு இருந்த வாய்ப்பையும் அதிகரித்தது. அட்டனில் மலையக வரலாற்றிலே முதன் முறையாக நடேச ஐயரின் தலைமையில் பிரமாண்டமான கூட்டம் நடந்தது. நடேச ஐயரின் பிரவேசம் தோட்டத்துரைமாரையும் கங்காணிமாரையும் கதிகலங்க வைத்தது. இவரது செல்வாக்கை உடைக்கவும், தோட்டத் தொழிலாளர் தொழிற் சங்கங்களில் சேர்ந்து போராடுவதை தடுக்கவும் தோட்டத் துரைமார் தங்கள் கைக்கூலிகளைப் பாவித்தனர். கங்காணிமார் இதில் முதன்மை வகித்ததில் ஆச்சரியமில்லை. மேலும் தோட்ட உத்தியோகத்தர் சம்மேளனமும் இத்தகைய கைக்கூலியாக இயங்கியது. துரைமாரின் லஞ்சக்காசில் இயங்கிய 'ஊழியன்' என்றப் பத்திரிகை நடேசஐயரை சிறையில்போட வேண்டுமெனக் கூறியது. இத்தடைகளை மீறி நடேச ஐயர் 'அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சம்மேளன'தை ஸ்தாபித்தார்.

இக்காலக்கட்டத்தை அடுத்து தொழிலாளர் வேதனத்தில் குறைப்பு நடந்தது. 1929ல் 54 சதமாக இருந்த நாட் சம்பளம் 1933ல் 41 சதமாக வீழ்ச்சி அடைந்தது. இதனல் தோட்டப் புறங்களில் பட்டினியும், பிரச்சினை தளுமுண்டாக உறுதியற்ற நிலையில், மலையகத்தில் தோட்டத்துரைமாரும், அவர்களது கைக்கூலிகளும் மேற் கொண்ட நடவடிக்கைகள் நடேச ஐயரை பின்வாங்கச் செய்தன. இதற்கு அப்போது தோட்டப்புறங்களில்ஏற்பட்டிருந்த பொருளாதாரநெருக்கடியும்ஒருகாரணமாகும். மேலும் நடேச ஐயரின் பிற்கால நடவடிக்கைகள் போதிய தீர்க்க தரிசனமற்று பிசுபிசுக்கத் தொடங்கின. இதனல் 1931ல் மலையகத்தில் வீசிய தொழிலாளர்களின் இயக்கப்புயல் 1933ஐ அடுத்து தணிந்தது.

பிறகு 1939ஐ அடுத்து தான் புதிய தலைமைகளும், முயற்சிகளும் உருவாவதைக் காண்கிறோம். மலையக ஸ்தாபன வரலாற்றில் நடேச ஐயரின் பங்கு குறிப்பிடத்தக்கது. ஆரம்பகர்த்தா என்ற ரீதியில் முதல் மலையக தொழில் சங்க ஜாம்பவான் நடேச ஐயரே!

-(தொடரும்)

# 1977 பொதுத் தேர்தல் — ஒரு கண்ணேட்டம்

கடந்த பொதுத்தேர்தலில் யு. என். பீ. யின் வெற்றியை எல்லாரும் எதிர்பார்த்திருந்தாலும், யு. என். பி. யின் இத்தகைய அமோக வெற்றியையும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் படுதோல்வியையும் யாரும் எதிர்பார்த்திருக்க வில்லை எனலாம் திரு. ஜே. ஆர். ஜயவர்தன உட்பட

1970ல் மகத்தான வெற்றி நாட்டியவர்கள் இன்று இல்லை என்பதை பார்க்கும் போது யு. என். பி. யின் திறமை மாத்திரம் வெற்றிக்கு காரணம் இல்லை என்பது புலப்படும்.

யு. என். பி. யின் வெற்றிக்கான காரணங்களை அதன் எதிரிகளின் தோல்விக்கான காரணங்களில் இருந்தே பெருமளவு பெற வேண்டியுள்ளது. கடந்த அரசாங்கம் இந்த அமைப்பின் கீழ் பல துணிகரமான நடவடிக்கைகளை மேற்கொண்டது என்பதை மறுப்பதற் கில்லை குடியரசுப் பிரகடனம், கர்ணி சீர்திருத்த சட்டம் என்பன உதாரணங்கள் ஆனல் நடைமுறையிலேயோ இவை எதிரான விளைவுகளையே உருவாக்கின. காணி சீர்திருத்த சட்டம் ஆயிரக்கனக்கான தோட்ட தொழிலாளர்களை, உத்தியோகத்தர்களை வெளியே தூக்கிவீசியது. காணிகள் ஏழை விவசாயிகளுக்கும், தோட்ட தொழிலர்ளர்க்கும் கிடைக்கும் என நினைத்தோம். மாருக அவை அரசாங்கத்தின் வால்களுக்கும், கைக்கூலிகளுக்குமே கிடைத்தன.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கை துணிகரமானதாக இருந்தாலும், அதை நடைமுறைப் படுத்தியவர்களில் பலர் அரசியல் சீர் கேடுடையவர்களாகவும், இனவாதிகளாகவும் இருந்தனர். எம். பி. க்கள், மந்திரிமார், அரசாங்க உயர் அதிகாரிகள் ஆகியோர்ரின் ஆணவம், ஊழல்கள் எதேச்சாதிகாரம் என்பன அரசாங்கத்தின் ஆதரவுக்கு ஆப்பு வைத்தன. கொப்பேகடுவ, ஜயரத்ன போன்ரூரின் ஆணவ நடவடிக்கைகள் நேரடியாகவே மலையக மக்களைப் பாதித்தன, விலைவாசி ஏற்றம், வேலையில்லத்தின் டாட்டம் ஆகியவை இக்குறைகளை விஸ்வ ரூபமாக்கின.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் நம்பிக்கை இழந்த மக்கள் இடது சாரி ஐக்கிய முன்னணியை முற்ருக நிராகரித்தனர். இவர்கள் கூட்டு முன்னணி அரசாங்கத்தில் இருந்த போது, அகங் காரத்துடனும் இனவாதப் போக்குடனும் நடந்துக்கொண்டார்கள். குடியரசு ஆரசியல்சட்டத்தைதயாரித்த இடது சாரி தலைவர் அதில் சிறுபான்மை மக்களின் உரிமைகளையும், மலையக மக்களின் அடிப்படை மனித உரிமைகளையும் பலிவர்ங்கினர். தான் பெருந்தோட்ட அமைச்சராக இருந்தும் மாதச் சம்பளம் கேட்ட தோட்டத் தொழிலாளரை என்னிரகையாடினர் இவை எல்லாவற்றையும் சோசலிசம் என்ற கோசத்தின் கீழ் செய்தார்கள். சமதர்ம சமுதாயநாமங்களை தங்கள்மோசடிகளுக்கு பாவித்ததன் மூலம், முற்போக்கு கொள்கைகள் மீது வெறுப்பை ஏற்படுத்தக் காரணமாக இருந்த இவர்களை வரலாறு தண்டித்திருக்கிறது என்றே படுகிறது.

வடகிழக்குப் பகுதியில் வாக்காளர்களில் பலர் தற்போதுள்ள அமைப்பில் தங்களுக்குள்ள நம்பிக்கையின்மையை வெளிப்படுத்தி இருக்கின்ருர்கள். அதே நேரத்தில் வடகிழக்குப் பகுதிகளுக்கு வெளியிலேயே பெரும் பாலான தமிழர்கள் வாழ்வதையும் அவர், களில் கணிசமான பகுதியினர் யு. என். பி. க்கு வாக்களித்திருப்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எனப்பட்ட திரு. தொண்டமானுக்கு மலையக் வாக்காளர்களில் அரைவாசிப் பேர் கூட வாக்களிக்காததால்தான் அவர் மூன்ருவது எம். பி. யாக வந்தார். தமிழர்களின் பிரச்சனை விசுவரூப மெடுத்துள்ளதை கடந்த தேர்தல் முடிவு காட்டுகின்றது. இடதுசாரியினர் தமிழர்களின் ஆதரவைப் பெறத் தவறிவிட்டனர்.

இவை, யு. என். பி. யின் வெற்றிக்கு அதன் செல்வாக்கைவிட எதிர் கட்சிகளின் பலவீனமும், பொருளாதாரப்பிரச்சனைகளுமே காரணம் எனப் புலனுக்குகின்றன் யு. என். பி. வெற்றியின் பின்னர் வாழ்க்கை செலவு ஆகோ ஓகோ எனக் குறையும் என எதிர்பார்த்தவர்களும், பெரிய உத்தியோகங்கள் கிடைக்கும் என நம்பியவர்களும் ஏமாந்துள்ளதாக தெரிகிறது. இந்த அரசாங்கம் எதிர்நோர்க்கும் பிரச்சனைகள் யாவற்றையும் இந்த அமைப்பு தீர்த்து விடாது எனவே மீண்டும் எதிர்க்கட்சிகள் செல்வாக்குப் பெறும் வாய்ப்பு இருக்கிறது புதிய இளம் வாக்காளர்களான $1\frac{1}{2}$ கோடிப் பேரில் பலர் யு. என். பி. யினதோ அன்றி நாட்டின் கடந்த கால வரலாற்றை அறிந்திருக்காதவர்கள் மேலும் யு. என். பி. யில் இனவாதமும், எதேச்சாதிகாரரும் இல்லை என்ருகிரதா? எனவே ஒரு குறிப்பிட்ட கட்சியின் வெற்றியில் தடுமாறி பின்னே ஓடும் மலையக தலைவர்கள், சந்தர்ப்பவாதிகளும், தங்கள் அவசர நடவடிக்கைகளால் எதிர்கால அரசியல் மாற்றங்களில் மலையக மக்களை சிக்கலுக்கு உள்ளாக்கிவிடக் கூடாது நடுநிலையா, கட்சி சார்பா என இவர்கள் தீர்மானிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் உலகிலே

## இளமையிற் கல்வி

இங்கு ஒரு பெரிய கலவரம் நடந்திருக்கிறது அதன் பெயரால் ஆயிரம் கொள்ளைகள், கொலைகள், கற்பழிப்புகள், தீவைப்புகள் இன்னும் எத்தனை எத்தனையோ பயங்கரங்கள் நடந்து முடிந்திருக்கின்றன. இவை யெல்லாம் மாணவர்களை, இன்றைய இளம் சமுதாயத்தை எங்கோ ஒதுங்கி விட்டு அவர்கள் கண்காணாமல் நடக்கவில்லை. அடிபட்டவர்கள் மத்தியிலே; அல்லது அடித்தவர்கள் மத்தியிலோ ஏதோ ஒரு பகுதியில் ஒவ்வொரு செயலும் தம் இளம் நெஞ்சில் பதியப் பதிய சாட்சியங்களாக நின்றிருக்கிறார்கள், அனுபவித்திருக்கிறார்கள். இது எங்கு கொண்டு போய் விடப் போகிறது?

இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்பார்கள் இது புத்தகத்தை வைத்துக் கொண்டு படிக்கிற, படிப்பிக்கும் பாடம் மட்டும் தானா? இல்லை, காணுகின்ற காட்சிகளுக்கும்தான்-நாளைய சமுதாயம் இன்றைய தலைமுறையின் கையில் என்றால் அது அவர்கள் இன்று எவ்வாறு நடத்தப் படுகின்றார்கள் என்பதைப் பொருத்துதான் அமையும் அமைய முடியும். வீடு எரிய, பெற்றோர் கொலை செய்யப்பட, வெட்டுப்பட கொத்துப்பட சகோதர, சகோதரிகள் மானப் பங்கப்படுத்தப்பட பார்த்துக் கொண்டிருந்த இளம் நெஞ்சங்களின் கொந்தளிப்பை குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது கூடாது.

### இளம் நெஞ்சங்களிலே நஞ்சு

அண்மையில் நடந்த இனக் கலவரத்தின் போது தமிழர்மீது நடத்திய தாக்குதலில் மாணவர்களும், படித்த இளைஞர்களும் பங்கு கொண்டதைக் காணக் கூடியதாக இருந்தது. கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற காட்டுமிராண்டி நடவடிக்கைகளில் பெரும்பான்மை இனத்தின் மாணவ சமூகம் ஈடுபட்டது இந்த நாட்டிற்கு ஒரு அவமானமாகும்.

பல பெரியவர்களும், அனுபவ சாலிகளும் கவலையோடு தெரிவிக்கும் கருத்துக்கள் கவனிக்கத் தக்கவை. மாணவ சமுதாயம் இன அடிப்படையில் பிரிக்கப் பட்டிருக்கிறது. முக்கியமாக சுயமொழி கல்வி என்ற போர்வையில், மாணவ சமூகத்தை தமிழ், சிங்கள, முஸ்லிம் என பிரித்து தனி தனி பள்ளிகளில் அடைத்தார்கள். சிங்களப் பள்ளிகளுக்கு சலுகைகள், காட்டி போட்டி மனப் பான்மையை வளர்த்து பிஞ்சு உள்ளங்களில் இனவாதம் என்னும் நஞ்சை கலந்து ஊட்டியிருக்கின்றார்கள். பாடப்புத்தகங்களில் கூட தமிழர்க்கெதிரான இனத்துவேசம் மறைமுகமாக ஊட்டப்பட்டிருக்கிறது. துட்டகெமுனு, எல்லாள மன்னர் கதையும், ஏன் இராமாயனக் கதையும் கூட சிங்கள மாணவர்களிடையே இனவெறியைத் தூண்டும் வண்ணம் கற்பிக்கப்படுகின்றன. இந்த அமைப்பில் பொய்யும் புரட்டுமே மாணவர்களுக்கு வரலாறு என்ற பேரில் கற்பிக்கப்படுகின்றன.

மேலும் சிங்கள மாணவர்கள் மத்தியில் ஆதிக்கம் செலுத்தும் பத்திரிகைகள், துணுக்குகள் என்பவை பெரும் பாலும் பலாத்காரத்தையும் பாலியல் வக்கிரத்தையுமே மையமாகக் கொண்டுள்ளன. ஏனைய மொழிப் பத்திரிகைகளின் மட்டரகமான சரக்குகளை, வியாபார நோக்கத்திற்காக மாணவர் மீது திணிக்கும் இந்த பத்திரிகை விபசாரம் கண்டிக்கப்பட வேண்டும்.

### காடைத்தனத்தால் கல்விக்குப் பங்கம்

இனக்கலவரத்தின் காரணமாக மலையகத்தில் பல பாடசாலைகள், எரிக்கப்பட்டும், சின்னாப் பின்னப் படுத்தப்பட்டும் உள்ளன. பல ஆசிரியர்களும், மாணவ மாணவிகளும் தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கின்றார்கள். பெரும்பாலான பாடசாலைகள் நடத்தப்பட முடியாத நிலையில் உள்ளன. அநேக பாடசாலைகளில் ஆசிரியர்கள் வந்து சேரவில்லை, பல பாடசாலைகளில் மாணவர்களின் வரவு குறைந்துள்ளது.

ஆசிரியர்கள், தங்கள் சொந்தப்பிரதேசங்களை விட்டு வந்து தங்கப் பயப்படுகின்றார்கள். மாணவர்களும், மாணவிகளும் இனவாத காடையர்கள் நிறைந்துள்ள பிரதேசங்களுக் கூடாகவும், நகர்புறங்களுக்கும் வரவேண்டியுள்ளது. அரசாங்கம் வெறுமனே பாதுகாப்பு, தருகிறோம், தருகிறோம், எனக் கூறுவதுடன் நிற்காமல் இது போன்ற நடை முறை பிரச்சினைகளை கவனத்தில் எடுத்து பாதுகாப்பும், நிவாரணமும் அளிக்க முன்வர வேண்டும்.

## மலையகத்தில் சாதிவெறியும் பலிவாங்கலும்

அட்டன் பகுதி பிரதான பாடசாலையொன்றின் அதிபராக, இப்பகுதியில் பல வருடம் மலையக மக்களுக்குச் சேவையாற்றிய முதுபெரும் ஆசிரியர் ஒருவர் நியமிக்கப் பட்டிருந்தார். இவரின் நியமனம், சுற்றி சிங்கள இனவாதிகள் உதைக்கும் இந்த நேரத்திலும் சாதி வெறியர்களுக்கு நமச்சலை ஏற்படுத்தியது. மலையகத்தலைவரின் உதவியுடன் இந்த சேவையாளரின் பதவி பலிவாங்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. பல லட்சம் தமிழர்களின் தலைமைகள் இப்படி சாதித்திமிரை நடைமுறைப் படுத்துவது நல்லதல்ல. மலையகத்தை விட்டு சாதி துவேசம் ஒழிய வேண்டும். இந்த நல்ல ஆசிரியர் இப்படி பழிவாங்கப் பட்டது குறித்து மலையகத்தின் படித்த சமூகம் வெட்கமும், வேதனையும் அடைகிறது.

## இன வெறியர்களால் பிக்கோ கொலை

தென்னாபிரிக்க விடுதலைப் போராட்ட வீரர்களுள் ஒருவராகக் கருதப்படும் பிக்கோ, ஆபிரிக்காவின் மார்ட்டின் லூதர்கிங் என அழைக்கப்படுபவர். பெரும்பான்மைக்குப்பு மக்களுக்கு எதிராக காட்டுமிராண்டித்தனமானசர்வாதிகாரத்தை நடத்தும் வெள்ளையர் அரசாங்கம், நிற ஆதிக்கத்திற் கெதிராக குரலெழுப்பும் எவரையும் கைது செய்து சிறையில் அடைத்து வாட்டி வதைத்து வருகிறது. பலர் சித்திரவதைக் குள்ளாக்கப் பட்டு கொலை செய்யப் படுகின்றனர் பிக்கோ அண்மையில் கைது செய்யப்பட்டு சிறையில் இருக்கும் போது கொலை செய்யப் பட்டுள்ளார். அகிம்சையை போதிக்கும் பிக்கோவிற்கே ஏற்பட்டுள்ள இக்கதி பரவலான அதிருப்தியையும் வெறுப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

## ஜனதாவின் செல்வாக்கு குறைகிறதா?

ஜனதா கட்சி இந்தியாவில் அமோக வெற்றியோடு ஆட்சியேறி மாதங்களாகின்றன. மக்கள் வாழ்க்கைப் பிரச்சனைகளை முன்வைத்த ஜனதாவிற்கு வாக்களித்தனர். ஆனால் இன்னும் விலைவாசிகள் இறங்கவில்லை. வேலையில்லாத் திண்டாட்டமும், பணவீக்கமும் விஸ்வரூபமெடுத்துள்ளன. இந்நிலையில் கடந்த அரசாங்கத்தில் பிழைபிடிப்பது மாத்திரம் மக்களைத் திருப்திப்படுத்துவதாகத் தெரியவில்லை. பொருளாதார நெருக்கடிகளை ஒழித்துக்கட்டுங்கள் என மக்கள் கூறுவது, மதுப்பழக்கத்தை ஒழித்துக்கட்டுங்கள் என பிரதமர் மொரார்ஜியின் காதுகளில் ஒலிக்கிறது. இவ்வாறு இந்தியப் பத்திரிகைகள் விமர்சிக்கின்றன.

## இயக்கம் அறிமுக விழா

ஜூலை 16ம் திகதி அட்டன் நகரசபை மண்டபத்தில் இயக்கம் வெளியீட்டு விழா நடந்தது. இதன் முதல் பிரதியை தொழிலாள தோழர் பச்சைமுத்து வாங்கினார். பலரும் மேலதிகப் பணம் கொடுத்து பிரதிகளை வாங்கி ஊக்கப் படுத்தினார்கள்.

திரு. மரியதாஸ் உரையாற்றுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார். 'மலையகமக்கள் இயக்கம் மலையக மக்களினது விடுதலைக்காகப் போராடும் இவ்வேலையில், பத்திரிகை ஒரு இன்றியமையாத தேவையாகும். இன்று பெரும் பணம் படைத்தவர்களால் நடாத்தப் படும் பத்திரிகைகள், செய்திகள் என்ற பெயரில் பெரும் பாலும் ஏமாற்று வித்தையே நடத்துகின்றன. தமக்கு சாதகமான சக்திகளுக்கே இவை வக்காலத்துவாங்கிமக்களுக்குத் துரோகம் செய்கின்றன. இயக்கம் மக்களுக்கு உண்மையை உரைத்து, நேர்மையாக உழைக்கும்.'

கண்டி கிளையின் சார்பில் உரையாற்றிய திரு. சுதந்திரராஜ் இயக்கம் முதல் பத்திரிகையே நம்பிக்கையூட்டுவதாகவும் கனமுள்ளதாகவும் இருக்கின்றதெனக் குறிப்பிட்டார்.

நாவலப்பிட்டிக் கிளையின் சார்பில் உரையாற்றிய திரு. ஆறுமுகம் அவர்கள் தமிழக தேர்தல் குறித்த சரியான கண்ணோட்டத்தை இயக்கத்தில் தான் முதன் முதலில் பார்ப்பதாகவும், இயக்கம் சர்வதேசிய விவகாரங்களை இன்னும் கூடுதலாக மக்களுக்கு அறிமுகப் படுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

நுவரெலியா கிளையின் சார்பில் பேசிய திரு. எம். ராமலிங்கம் அவர்கள் இயக்கம் மக்கள் மீது ஆதிக்கம் செலுத்துகின்ற பொருளாதார அரசியல் அடக்கு முறைகளுக்கெதிராகவும், இன, சாதி ரீதியான பாரபட்சங்களுக் கெதிராகவும் போராட வேண்டுமெனக் குறிப்பிட்டார்.

ஹப்புத்தளையைப் பிரதிநிதித்துவப் படுத்திப் பேசிய திரு. சின்னதம்பி அவர்கள் இயக்கத்தை வளர்த்தெடுக்கும் பணியில் தமது உறுதிப்பாட்டை வலியுறுத்தினர்

தலவாக்கலை கிளையின் சார்பில் திரு. முத்துவேல் மலையக மக்களின் வரலாற்றை நிதர்சனமாக்கும் பணியை இயக்கமே முதன் முதலில் மேற் கொண்டுள்ளது என்றார்.

பூண்டுலோயா கிளையின் சார்பில் திரு. எம். எஸ் ஆறுமுகம் பேசியதோடு. மஸ்கெலியா, அப்கொட் கிளைகளின் சார்பிலும் பாராட்டு தெரிவிக்கப் பட்டது.

பத்திரிகை ஆசிரியர் என்ற ரீதியிலும் கொழும்பு கிளையின் சார்பிலும் பேசிய திரு. எல். சாந்திகுமார், பத்திரிகை நடத்துவதில் உள்ள சிரமங்களைகூறி இயக்கம்முதல் பிரதி இயக்க அங்கத்தவர்களின் பணத்தாலும், ஊக்கத்தாலும் வெளிவந்தமைக் குறித்துப் பெருமைப் படுவதாகக் குறிப்பிட்டார். நடிகைகளின் செருப்பிற்கும், தலைவலிக்கும், பொப் என்ற வளிப்புகளுக்கும் மக்களை அடிமையாக்கும் பத்திரிகை விபசாரங்களை தூக்கி வீசிமக்களுக்கும், இளைஞர்களுக்கும் சரியானமார்க்கத்தை போதிக்கும் பத்திரிகை தர்மத்தை வளர்க்க உதவ வேண்டுமெனக் கூறிய இவர், இயக்கத்திற்கு விமர்சன பொருளாதார ரீதியாக உதவியவர்களுக்கும், அதன் அமைப்பு குறித்து ஆலோசனை நல்கியவர்களுக்கும், பத்திரிகையை உரிய நேரத்தில் கொண்டுவர உதவிய அச்சகத்தின் உரிமையாளர் திரு. ராஜமணிக்கும், அதன் சகல ஊழியர்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

வித்தியாலங்கார பல்கலைக் கழகத்தைச் சார்ந்த திரு. சுப்பிரமணியத்தின் வரவேற்புரையோடு ஆரம்பித்தக் கூட்டத்தை பேராதனை பல்கலைக் கழகத்தைச் சார்ந்த திரு. மெய்யநாதன் நன்றியுரையுடன் முடித்து வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மலையாண்டிப் பூசாரி;

காளி கருப்பாயி காட்டேறி கொண்டம்மா
மாடன் முனியாண்டி மலையேறும் நீங்களெல்லாம்
மலையை விட்டு இறங்கி வந்து மலையாண்டி துயர் அறிந்து
நல்லவழி காட்டிடுவீர் நானழைத்தேன் வந்திடுவீர்

சிவனாண்டி;

சாமியே சரணம்.

மலை; அட, இன்று தினம் நானுனக்கு இயம்புவது என்ன வென்றால், நன்றதனைச் செய்து இந்த நானிலத்தில் வாழ்ந்திடவே செய்து பசி பட்டினியாய் சீரழிய விட்டிடாமல், பிள்ளையைப் போல் காப்பாத்தி பேணி வளர்த்த உனை கொன்று குவித்ததடா கொலைகாரக் கூட்டமது.

சிவ; யாரைச் சாமி சொல்லுறீங்க.

மலை; இன்றுவரை எம்முழைப்பில் எல்லாமே செய்ததுடன் தின்று கொழுத்தவர்கள் திமிர் மீறிப் போனதனால் ரெண்டுமாதம் முன்தொடங்கி ரெக்குளாசி பேசிவிட்டு இடண்டு பிள்ளை தாய் தகப்பன் பெற்றெடுத்த பிள்ளையும், ரெண்டு நாள் தாயையுமே ரெண்டு மூணாய் வெட்டியுமே, கற்பைப் பறித்துமே காடைத்தனம் செய்ததுடன் சாறுயுடன் சட்டையையும் தாறுமாறாய்க் கிழித்தெறிந்து பிறந்தமேனி கோலத்துடன் பெண்களை நடுத் தெருவில் ஓடவிட்டு கைகொட்டி உவகை கொண்டு மகிழ்ந்தார்கள்.

சிவ; என்னுங்க சாமி இப்படி சொல்றீங்க. சண்டை அடிபுடின்னு இதெல்லாம் நடக்குமுண்ணு நீங்கதானே சொன்னீங்க. இப்ப என்னடான்னா ... ?

மலை; சொன்னேன் மறுக்கவில்லை சொல்லுகிறேன் இப்போதும், சின்னத்தலைமான் சீரழிஞ்சு தலைவருக ஒண்ணுகச் சேந்து பாட்டாளி வர்க்கத்து பெண்ணுகப் போக மர்மங்கள் செய்தார்கள். என்றாலும் ...

சிவ; என்னுங்க சாமி என்றாலும்ணு நின்னுட்டீங்க.

மலை; ஒன்றுமில்லை தம்பி உன்மனதை நான் திறந்து சொல் சொல்லுகிறேன் கேட்பாய் . . துயர்தனைப் போக்கிடவே, இந் நாட்டின் இனங்களது இன உணர்வைத் தவறாகப் பாவித்துப் படுபாவி தலைவரெலாம் பாரினிலே, வெறிகொண்ட கூட்டமதாய் வளர்த்து விட்ட காரணத்தால்,ஒன்றாக வேலைசெய்து உறவாக வந்தவனே வெட்டி கொலை செய்து வேடிக்கை காட்டுகிறான். பால்குடியே மாறாத பாலர்களும் இவர் வழியில் கொள்ளை கொலை களவு கொடுமைமிகு கற்பழிப்பு எல்லாம் நடக்கையிலே எதிரேதான நின்றிருந்தார். வசதிப் படுமிடத்தில் வாண்டுப் பயல்களுமே - சோந்து இந்தத் தீச்செயலில் தீவிரமாய் பங்கெடுத்த - காரணத்தால் இந்நாட்டில் கண்ணியத்தின் எதிர்காலம் மாண்டு மடிந்து மண்ணாகிப் போனதனால் - எதிர்கால நடவடிக்கை என்மனதில உறுத்துதடா. - இங்கெமக்கு எதிர்காலம இல்லையென்ற நிலையாகி - பங்கச் செயலுணர்வு பயமுறுத்திக் கொல்லுதடா. - எந்நேர மும் பயத்தால் எம்மவர்கள் வாழ்வதெனில் - அப்பா முடியாது ஆனதனால் சொல்லுகிறேன் - எம்மவர்க்குக் காப்பளிக்க இனிதான அரசில்லை - ஆபத்தில் தஞ்சம்புக அடுத்த் வீட்டுக் காரனில்லை.

சிவ; இல்லை, இல்லையென்று சொல்லிக்கொண்டிருந்தால் சரியா? சொல்லவேண்டியதை வெளிப்படையா சொல்லுறதுதானே.

மலை; சொல்லத்துடிக்குதடா சொந்தச் சகோதரனே, சொல்லாமல் விடமாட்டேன் சொல்லுமுனே சிலவார்த்தை
இதுவரையும் நாம் சொன்ன எதையுமே நீர் கேட்கவில்லை
எங்கள் தலைவரென்று ஏமாந்து போனீர்கள்
இன்னும் நாம் சொல்லுவதை ஏற்காமல் நிரந்த
சின்னப் பிள்ளைத்தனமாய் செயல்பட்டு வருவதனால்
சொல்லுவது வெளிப்படையாய் துயர்தனைக்
கொண்டுவரும்
ஆனதனால் பக்குவங்கள் அடையுமவரை பொறுத்திருந்து
சொல்லுவதாய் உத்தேசம் அதுவரையும் உங்களது
மன உறுதி தளராமல் மாற்றானின் வன்செயலை
சினங்கொண்டு எதிர்ப்பதற்கு தீரமுடன் நிலைநிற்பாய்
மாறிவரும் நிலையை மனங்கொண்டு மலையாண்டி
உன் கனவில் தோன்றி உரைப்பானே மிச்சமதை.

சிவ; சரிங்க சாமி.

மலையக மக்கள் இயக்கத்தைச் சேர்ந்த அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு தாமதியாமல் விரைந்து விடயங்களைக் கேட்டறிந்து, செய்யக்கூடியதைச் செய்தார்கள். திரட்டிவந்த நூற்றுக்கணக்கான சோகக் காவியங்களில் இது ஒன்று. இத்தோட்ட மக்கள் இவர்களிடம் கூறியவாறே பிரசுரித்துள்ளோம். ஆ—ர்.

# ஒரு தோட்டம் மயானமாகிறது

275 தொழிலாளர்களுடன் 600 பேரைக் கொண்ட அந்த கரந்தகொள்ள றப்பர் தோட்டத்தில் காணப்படும் அந்த செழிப்பான இறப்பர் மரங்கள் எங்களதும், எங்களது முதாதையினரதும் உடலினதும் உழைப்பின வெளிப்பாடுகளாகும்.

இங்கு இருக்கின்ற 8 சிங்கள குடும்பங்களும் வெவ்வேறு இனங்களாக இருக்கவில்லை. மாறாக அவர்களது உறவு மாமன், மச்சான், அக்கா, அம்மா வரையில் இருந்தது. ஆனால் இந்த அந்நியோன்ய நிலை ஆத்மீக உறவு, அடே தோட்டக்காட்டான், கள்ளத்தோணி என்று கூறி துன்புறுத்தி அவர்களது உயிரைப் பறிக்குமளவுக்கு மாறுமென அவர்கள் ஆகஸ்ட் 18ம திகதி பிற்பகல் 1-59 வரை அறியவில்லை.

ஆம் ஆகஸ்ட் மாதம் 18ம் திகதி. பகல் சாப்பாட்டுடன், உழைப்பை விற்கச் சென்ற பெண்கள், உழைப்பை விற்றுத் திரும்பாத ஆண்கள் தவிர அந்த லயத்தில்முதியவர்களும், மூதாட்டிகளும், தாயின் தாலாட்டில் மயக்கித் தூங்கிய குழந்தைகளும் ஆடித்திரிந்த சின்னஞ் சிறுசுகளுமே மிஞ்சியிருந்தனர்.

2 மணியிருக்கும் அந்தலயத்தில் பெரும் சந்தடி யேற்படத் தொடங்கியது. 50 பேர் வரையில் வந்தவர்கள், அவர்களை ஓட ஓட விரட்டியடித்தனர். குழந்தைகள் தொட்டிலில அலறித துடித்தன.

அங்களது உழைப்பையெல்லாம் கொடுத்துவிட்டு, இன்று உடல் உரமாக்க காத்திருந்த வயோதிபர்கள் அடித்து நொறுக்கப்பட்டனர்; கத்தி, மண்வெட்டி, அலவாங்குடன் பழகிய கைகள் இன்று அந்தக் காடையரின் கம்பு, தடி, சைக்கிள் செயின்களுக்கு முன்னால் நடுங்கிக்கொண்டிருந்தன.

லயமே சின்னா பின்னப்பட மக்கள் உயிரைக்காக்க ஓடும் வேளையில், அவர்கள் வேறு யாருடைய உயிரையுமே காக்கும் நிலையில் இருக்கவில்லை. 78 வயது மூதாட்டி இன்றோ நாளையோ என்றிருந்த அந்த தாயால் நகரவே முடியவில்லை. அவள் செய்த குற்றம் அந்த அந்த இடத்தை விட்டு ஓடாத தான். அத்தாயின் உயிரையே பாவிகள்பறித்துவிட்டார்கள்.

எங்கு செல்வது? எங்கு செல்வது? எல்லோரது மனமுமே சூனியமாகிவிட்டது. துரையிடம் பாதுகாப்புக் கோரித் திரண்டு சென்றார்கள். ஆனால் அவனுக்கோ அன்றைய வேலையைப் பற்றித்தான் கவலை. ''இரவு வேலைக்குச் செல்லுங்கள் உங்களைப் பாதுகாக்கிறேன்'' என்று கூறியவன் வேலை முடிந்தவுடன் கைகழுவி விட்டானாம. அவனும் காடையர்களுடன் சேர்ந்து கொண்டு அடிபட்டு உதை பட்டு கிடந்த அனைவரையும் காடையர்களிடம் மன்னிப்புக் கேட்கும்படி கேட்டான்.

''தமிழர்கள்தான் முதலில் குழப்பத்தை ஏற்படுத்துனார்கள் கொலைகளைச் செய்தார்கள் எங்களை மன்னியுங்கள்' என்று குழந்தைகள் தொடக்கம் அனைவரையும வரிசையில் விட்டு கும்பிட வைத்தானும!

ஒரு நாளில் இக்கதை முடியவில்லை தொடர்கிறது. மறுநாளும் சிங்களக் கிராமமே திரண்டு வருகிறது. 1000 பேர் வரையில் சூறாவளியாகத் திரண்டு வருகின்றவர்களிடம் இவர்கள் எம்மாத்திரம். அவர்கள் கழுகுக்கண்கள் கன்னியர்களை சும்மாவிடவில்லை. விரட்டிப் பிடித்து, தூக்கிச் செல்லப்பட்டார்கள். அச் சகோதரிகள் ஒருவரால் அல்ல 10-20 காடையர்களால்பலாத்காரம்செயயப்பட்டார்களாம். அந்த 2பக்கு மேற்பட்ட சகோதரிகள் பற்றிய உண்மைகள் பொலிஸ் அறிக்கைகளிலோ அன்றி வேறு அறிக்கையிலோ இல்லை. அறிக்கையில் இல்லாத உண்மைகள் பொய்யாகிவிடுவதில்லை. இது பற்றி அறிய அத்தோட்டத்துக்குச் சென்றவர்களிடம் அப்பெண்கள் தயக்கத்துடனும், மிகவும் கவலையுடனும் இதனைக் கூறினார்கள்.

பிழைதிருத்தம்

6ம் பக்கத்தில் எதியோப்பிய செய்தியில்கடைசிவரி, சோமாலியா ரஸ்யரை வெளியேற்றியது என திருத்திக் கொள்ளவும.

# அன்று

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

இத்தோடு மலையக மக்கள் சில நடைமுறைப் பிரச்சினைகளையும் இனி எதிர்நோக்க நேரிடும். முன்புப்போல மலையகத்தில் உருவாகிய ஓரளவு வசதிப்படைத்தோர், கிராம நகர்ப்புறங்களில் நிரந்தரமாக, பாதுகாப்பாக குடியேற முடியாது. தோட்டப் புறங்களில் கல்வி கற்றோருக்கு உள்ள வேலைவாய்ப்புக்கள் சிங்களவர்களுக்கே கொடுக்கப்படுகின்றன. (கங்காணி வேலை உட்பட). சிங்களக் குடியேற்றம் காரணமாக வளர்ந்து வரும் மலையக சமூகத்திற்கு மலையகம் போதாமல் போகும அதே நேரத்தில் ஏனைய இடங்களுக்கும அவர்கள் பரவமுடியாது.

ஆகவே இத்தகைய சூழ்நிலை மலையகமக்களை பின்வரும முடிவுகளை நாடச் செய்துளளது.

மலையகத்தில் பாதுகாப்பான இடங்களுக்கு குடிபெயர்வது.

வட கிழக்குப் பிராந்தியங்களுக்கு செலவது.

இந்தியாவிற்கே திரும்பி செல்வது.

இம் மூன்று முடிவுகளில் எதை எடுக்கிறார்கள் என்பது அவர்கள் அபிலாஷையையும் அனுபவத்தையும் சார்ந்தது.

ஆனால் எதையும் தேர்ந்தெடுக்கும் பூரண உரிமை அவர்களுக்கு உண்டு. ஆனால் இலங்கையில் இருக்கத் தீர்மானிக்கும் மக்களைப் பொறுத்தவரை, அவர்கள் பெரும்பான்மை மக்களின் அடக்கி யொடுக்கப்பட்ட உழைக்கும் வர்க்கத்தின் அணியில் நின்றுப் போராடுவதே அவர்களின் பூரண விடுதலைக்கான வழி என்பதை இங்கு கூறி வைக்க விரும்புகின்றோம்.

இந்த அடிப்படையில் ம. ம. இயக்கம் பின்வரும் கோரிக்கைகளை முன் வைக்கின்றது.

- பாதிக்கப்பட்ட சகல மக்களுக்கும் பூரண நிவாரணமும், பாதுகாப்பும் வழங்குதல்.
- பாதிப்புக்கு காரணமான சகல சக்திகள் மீதும் (காவல்துறை, ஏனைய அரசாங்கததுறையைச் சார்ந்தவர்கள் உட்பட) தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
- இவ்வளவுக் காலம் இயற்றப்பட்ட குடியுரிமை சட்டங்கள் மக்களின் எண்ணங்களுக்கு மதிப்பளித்து இயற்றப்படவில்லை.

தற்போதைய நிகழ்ச்சிகள் உருவாக்கியுள்ள புதிய நிலைமையின் பின்னணியில் தங்கள் எதிர்காலத்தை தீர்மானிக்கும் வகையில் குடியுரிமைச் சட்டங்களை திருத்தம்செய்ய இலங்கை-இந்திய அரசாங்கங்கள் முன்வரவேண்டும்,

- இலங்கையில் இருக்கும் மலையக மக்கள் சகல உரிமைகளையும் அடைய சிறுபான்மை இனமாக அங்கீகரிக்கப்படவேண்டும்.
- இன ஐக்கியம் கோருபவர்கள், அதை வெறும் கோசமாக வைக்காமல், இத்தகைய யதார்த்த நிலைமைகளை உணர்ந்து, உணர்வு பூர்வமாக செயல்படுத்த முனையவேண்டும். (இன ஐக்கியம் நோட்டீசுகளிலும், கூட்டங்களிலும் உருவாவது அல்ல).

## சந்தா விபரம்:

| | |
|---|---|
| வருட சந்தா ரூ. | 7.00 |
| ஆறு மாதம் | 3.00 |

'இயக்கம்' பத்திரிகையின் சந்தாதாரராகுங்கள்.

உங்கள் சந்தாவையும் மற்றும் கேள்விகள், அபிப்பிராயங்கள், விடயதானங்கள் என்பவற்றை கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பவும்.

எல். சாந்திகுமார்,
61, இசிப்பத்தன மாவத்தை
கொழும்பு 5.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயக்கம்

## எதியோப்பியா சோமாலியா யுத்தம்

ஓகாடான் பிரதேசத்தை தமது கட்டுப்பாட்டினுள் வைப்பதற்காக எதியோப்பியாவிற்கும், சோமாலியாவிற்கும் நடக்கும் யுத்தம் அமெரிக்கா, சோவியத் யூனியன் ஆகிய வல்லரசுகளின் தலையீட்டால் மேலும் சிக்கலாகியுள்ளது.

இத்தகைய யுத்தங்களை ஊக்கப்படுத்துவதன் மூலம் அமெரிக்கா மாத்திரமல்ல, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகள் தங்கள் ஆயுதங்களையும் யுத்த தளபாடங்களையும் விற்பனை செய்யும் சடுதைகளாக இந்நாடுகளை ஆக்க முற்படுகின்றன.

மத்திய தரைக்கடல் பிந்தேசத்தில் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் பொருட்ர சோமாலியின் துறைமுகமான பெர்பராவை சோவியத் யூனியன் தனது முக்கிய கேந்திரஸ்தானமாகப் பாவித்து வருவதால் இவ்யுத்தத்தில் அது கூடிய அக்கறை எடுத்துக் கொள்கிறது.

இது இவ்விதமிருக்க எதியோப்பியா ரஷ்யர்களை வெளியேறுமாறு உத்தரவு பிறப்பித்துள்ளது.

## தமிழ்நாடு இயற்கைப்புயலும் அரசியல் புயலும்

தமிழ் நாட்டில் அண்மையில் வீசிய பயங்கரப் புயலில் பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்தும், வீடு, உடைமைகளை இழந்தும் உள்ளார்கள். மத்திய அரசாங்கம் தகுந்த நிவாரணமளிக்க முன்வந்துள்ளதாகத் தெரிகிறது.

இந்தப் புயல் தணிந்தாலும் அரசியல் புயல் தணிவதாகக் காணோம். இந்திராகாந்திக்கெதிரான ஆர்ப்பாட்டத்தின் போது கைதுசெய்யப்பட்ட கலைஞர் கருணாநிதியும் மற்றும் பலரும் இன்னமும் சிறைவைக்கப்பட்டிருக்கின்றனர்கள். இவர்களை விடுதலைச் செய்யக்கோரி தமிழ் நாடெங்கும் ஆர்ப்பாட்டங்களும், ஊர்வலங்களும் நடக்கின்றன.

சினிமாவில் கதாநாயகனாகவே வந்து, வில்லனால் சிறை வைக்கப்படும் எம். ஜி. ஆர். அரசியலில் மற்றவர்களை சிறை வைக்கும் வில்லனாக மாறிவிட்டாரா ? !

# மரமேறி விழுந்தவரை மாடு மிதிக்கிறது

மலையக மக்களே !

இதுவரை உங்கள் நெஞ்சில் இருந்த உறுதி எங்கே? உங்கள் கண்களில் பிரகாசித்துக் கொண்டிருந்த ஒளி எங்கே?

கோப்பித் தோட்டம் முதல் தேயிலைத் தோட்டம்வரை உருவாக்கிக் கொடுத்த உமது கரங்களின் வலிமை எங்கே ஓடி ஒழிந்துக் கொண்டது? இந்தக் கேள்விகளை ஒவ்வொரு மலையக மகனும் அடுத்தவனைப் பார்த்துக் கேட்டுக் கொண்டுதான் இருக்கின்றான்.

இதற்குப் பதில் ?

அதுதான் தெரியவில்லை ஏன் ?

இந்த மண்ணை எமது சொந்த மண்ணாக நினைத்து சீர்படுத்தினோம்... ஆனால் அதேமண்ணில் தான் உனது குடும்பத்தவரின் இரத்தம் ஆறுகப் பாய்ந்தது. நீ வளர்த்துவிட்ட தேயிலைச் செடி உனது சகோதரிகளின் கற்பு பறிக்கப்படுவதற்கு மறைவிடமாக அமைந்தது.

அந்த வேலையிலும் கூட நீ தொழில் செய்து கொண்டு தான் இருந்தாய்.

உனது விடுதலைக்கு இந்நாட்டின் தேசியக் கட்சிகளையும் அரசியல் வாதிகளையும் துணைக்கு அழைத்துக் கொண்டு தான் இருந்தாய்.

இதில் யூ. என். பீ., ஸ்ரீலங்கா, கம்யூனிஸ்ட், சமசமாஜி என்ற வேறுபாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் எல்லாக் கட்சிகளையும் ஏற்றுச் செயல்பட்டுத்தான் வந்தாய்; வாக்களித்தாய்.

இன்று நடந்தது என்ன?

உன்னை வைத்து உயர்ந்தவர்கள் அனைவரும் உன்னைக் கை விட்டு விட்டார்கள்.

இன்று நீ ஒரு அநாதை. அகதிகள் என்ற அசிங்கப் பெயரைச் சுமக்கவேண்டிய அப்பாவிப் பிராணி.

நீ

தனிநாடு கேட்கவில்லை. மற்ற இனங்களை அவமதிக்கவில்லை.

நடந்து முடிந்தவற்றுக்கு நட்ட ஈடு தரப்போகிறார்களாம். அது கிடைக்குமோ கிடைக்காதோ என்பது அடுத்த பிரச்சினை-ஆனால் உன் உயிருக்குக் கிடைக்கவிருக்கும் நட்ட ஈடு என்ன?

ஈனத்தனமாகப்பறித்தெடுக்கப்பட்ட உனது பெண் தெய்வங்களின் கற்புக்கு ஈடாக அவர்களால் எதைத் தரமுடியும்?

எல்லாவற்றையும் விட, இறுமாப்புடன் தலை நிமிர்ந்து வாழ்ந்த வாழ்க்கை மாறி 24 மணி நேரமும் பயப் பிராந்தியுடனும், அடிமை உணர்வுடனும் வாழவேண்டிய நிலைமையை மாற்றுவதற்கு என்ன மாற்று வழியைக் காட்டப் போகிறார்கள். அப்பனே! !

இவைகள் எல்லாம் வெத்து வேட்டுப் பிரச்சாரங்கள். எங்காவது பணம்படைத்த சிலர் (இன்சூரன்ஸ் செய்துகொண்ட காரணத்தால் மட்டும்) சில நன்மைகளைப் பெறலாமேயொழிய, உன்மீதோ அல்லது, உன் இனத்தின்மீதோ, ஏற்பட்ட இரக்கத்தினலோ பாசத்தினலோ அல்ல. இன்னும் நீ ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கப்படவில்லை.

உனக்கென ஒரு பாதுகாப்பான பிரதேசம் இல்லை.

இதற்கு வழியைத்தான் நாங்கள் தேடுகிறோம். கிடைக்கவில்லையே அப்பனே !

வடக்கிலும் கிழக்கிலும் நீ குடியேறிவிடலாம் என்று நினைக்கிறாய்.

பழக்கப்பட்ட காரணத்தால் குறைந்த கூலியைஏற்று வாழச் சம்மதிப்பாய் ஆனால் அதன் விளைவு ?

இதுவரையும் கூடிய கூலியுடன் வேலைசெய்து வந்த வடக்கு கிழக்கின் கூலிவிவசாயிகளின் வருமானத்தில் அடி விழும். அவர்களை யாரும் வேலைக்கு வைத்துக்கொள்ள மாட்டார்கள். இதனால் ?

அங்கும் போட்டி ஏற்படாது என்பது என்ன நிச்சயம்?

அங்கு நிம்மதி கிட்டுமா?

இவற்றை நாங்கள் கற்பனை பண்ணிக் கூறவில்லை.

இப்படி செல்லுமிடமெல்லாம் செல்லாக் காசாகச் சீரழியும் நிலைக்கு விடிவு என்ன? உன்னை வைத்துப் பிழைப்பு நடத்திவரும் 'உனது' தலைவர்களைக் கேட்டுப் பார்.

''இப்ப என்ன நடந்துரிச்சி? ஊரு ஒலகத்துல இதெல்லாம் சகசம்தானே. அவன் அடிக்க வந்தா நீங்களும் திருப்பி அடிக்கிறதுதானே'' என்று அருமையான விளக்கத்தைக் கொடுப்பார்கள்.

ஏனெனில்...?

அவர்களுக்குச் சகல பாதுகாப்புகளும் உண்டு.

இந்நிலையில் ஒன்றுமே இல்லாத நீ என்ன செய்யப் போகிறாய்.

# மலையகத்தோர் கண்களிலே இரத்தக் கண்ணீர் ஓடுகிறது

உனது அடுத்த திரையில் கவ்வாத்து வெட்டி கஷ்டப்பட்ட உனது சகாவுக்கு நீ தீட்டிக் கொடுத்த கத்தி உன்னையே பலிவாங்கி விட்டது.

காற்றைக்குடித்து நீ சேர்த்து வைத்த சொற்ப பொருட்களும் உன் கண்ணெதிரிலேயே சூறையாடப்பட்டு விட்டன. உனது தாயும் சகோதரியும் உன்னெதிரிலேயே கற்பழிக்கப் பட்டார்கள்.

உன் மனைவிக்கு உனது முன்னிலையிலே நடந்த அநாகரிகச் செயலைத் தடுக்க உனக்கு வலிமை இல்லாமல் போய்விட்டது.

இன்று

நீயொரு அரசியல் அநாதை. சொந்த நாடென நீ பறைசாற்றிக் கொண்டிருந்த நாட்டிலேயே நீ ஒரு அகதி.

உனக்கு இந்நிலை ஏற்படுவதற்கு முன்னர் ..

இந்நாட்டை வளம்படுத்த நீ எல்லாவற்றையும் செய்தாய்.

நாடு முழுவதிலும் உன்சகோதர சகோதரிகளுக்கு அநியாயம் நடந்து கொண்டிருந்த

உனது குறைகளைத் தீர்க்க எந்தவொரு வெளிநாட்டிலும் உதவிகேட்டு ஓடவில்லை. 'இலங்கை எங்கள் நாடடா, இனப் பகைமை ஏதடா' என்று இனிய கீதம் பாடிக் கொண்டு தான் இருந்தாய். கள்ளத்தோணி, பறத்தமிழன், தோட்டக்காட்டான் என்ற வசைச் சொற்கள் வந்தபோதுகூட நீ உனது மன உறுதியைக் குலைக்காமல்தான் இருந்தாய்.

ஆனால் இன்று ?

உனது வாக்கால்-உனது உதவியால்-உனது உழைப்பால் ஆட்சிபீடம் ஏறியவர்கள் உன்னை உதறித் தள்ளிவிட்டார்கள்.

நீ ஊரார் மத்தியிலே மிக மோசமாக வஞ்சிக்கப்பட்டு விட்டாய்.

உன்னை ஏற்றிச் சென்றுபாதுகாப்பளிக்க கப்பல் வரவில்லை-ஏரோப் பிளேன் வரவில்லை. மாறாக ?

போக்கிடம் இல்லாத வகையிலே புடைக்கப்பட்டாய்.

அந்தக் கோர சம்பவங்கள் நடந்த காலத்தின் மரண ஓலங்கள் இன்றும் எமது காதுகளில் ஒலித்துக் கொண்டுதான் இருக்கின்றன.

உன்னை அடித்தால் உனது உதவிக்கும், உனது பாதுகாப்புக்கும் நீ அடுத்த வீட்டு சிங்களவரின் அரவணைப்பை மட்டும் தான் நம்பிக்கொண்டிருந்தாய்.

ஆனால்...வேலியே பயிரை மேயும்பொழுது உன்னால் என்ன செய்யமுடியும்? எம். பீ. மார் உன்னை வஞ்சித்து விட்டார்கள். பொலிசார் உன்னைப் புறக்கணித்தது மட்டுமின்றி, பொல்லாங்கும் செய்து விட்டார்கள். அரசு உன்னை அவமதித்து விட்டது.

அகதிகள் முகாமுக்குச் சென்ற உனக்கு அங்கும் மரண அடிதான் கிடைத்தது.

தோட்டக்காட்டான் என்று சொல்லி உனக்குப் யானும் மற்றவர்களுக்குச் சோற்றுப் பார்சல்களும். அவர்கள் தண்ணீர் குடிக்கும் பைப்பில் உனக்கு இடமில்லை.

வசதிபடைத்த பாடசாலைகளிலும், கட்டிடங்களிலும் அவர்களுக்கு இடம். உனக்கு வசதிகுறைந்த பாடசாலைகளும் கட்டிடங்களும்.

இந்த இழிநிலையில் உன் எதிர்காலம்தான் என்ன?

அவர் சொல்கிறார்-இவர் சொல்கிறார்-அங்கு போய்விடுவோம்-இங்கு போய்விடுவோம் என்று உன்னை நீயே ஏமாற்றிக் கொள்ளாமல் உன் அடிமனதில் குரலெழுப்பும் அந்தராத்மாவின் உத்தரவை செயல் படுத்து ...

அதுவரை ?

உனக்கு எந்தவித ஆபத்தும் நேரக்கூடாது என்பதற்காக நாங்கள் முயற்சிக்கின்றோம். இந்த ஈனப் போராட்டத்தில் அநியாயமாகப் பலிகடாவாக்கப்பட்ட எமது இரத்த உறவுகளின் ஆன்மாவுக்கு அஞ்சலி செய்கிறோம்.

எம்மை இந்நிலைக்குத் தள்ளிவிட்டவர்களுக்குப் பாடம் படிப்பிக்க (அவர்கள் யாராயிருந்தாலும் சரி) எம்மைத் தயார் படுத்தச் சபதம் எடுக்கிறோம். உனதுகண்களில் இருந்து வடிகின்ற இரத்தக் கண்ணீரைத் துடைக்க எமமாலான எல்லாவற்றையும் செய்கிறோம்-அதற்காக

ஆணையிடுவது உங்கள் உரிமை உங்கள் ஆணைக்காக நாங்கள் காத்திருக்கிறோம்.

இப்பத்திரிகை, மலையக மக்கள் இயக்கத்திற்காக, தெஹிவளை, [illegible] இலக்கத்தைச் சேர்ந்த, இதன் ஆசிரியரான எல். சாந்திகுமார் அவர்களால் கொழும்பு 2, [illegible] அச்சகத்தில் அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org